பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**04 02 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் இரு நாடுகளின் பொருளாதார உறவுகளை உறுதியான முன்னேற்றத்திற்கு கொண்டு செல்லும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

**2.** எதிர்க்கட்சித்தலைவர் திரு. ராகுல் காந்தி, வர்த்தக ஒப்பந்தம் குறித்து மக்களிடையே தவறான தகவலை பரப்புவது கண்டனத்திற்குரியது என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

**3.** மழைநீர் சேமிப்பு பணிகளுக்கு பெரு நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு நிதியை பயன்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் வலியுறுத்தியுள்ளார்.

**4.** வரும் மார்ச் **31**ஆம் தேதி அனைத்து வங்கிக் கிளைகளும் செயல்பட வேண்டும் என்று ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ளது.

**5.** மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் இரு நாடுகளின் பொருளாதார உறவுகளை உறுதியான முன்னேற்றத்திற்கு கொண்டு செல்லும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஒப்பந்தத்தால் இரு நாடுகளிலும் வலுவான வளர்ச்சி, அதிக வேலைவாய்ப்புகள் மற்றும் குறிப்பிடத்தக்க கூட்டாண்மை உருவாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார முன்னேற்றத்திற்கும், வேலைவாய்ப்புக்கும் புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தந்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு திரு. ராஜ்நாத் சிங் நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

இந்திய-அமெரிக்க ஒப்பந்தத்தில் வேளாண்மை, பால்வளத் துறை போன்ற முக்கியமான துறைகளின் நலன்கள் பாதுகாக்கப்பட்டிருப்பதாக வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வேளாண் மற்றும் பால்வளத்துறையில் உள்ளவர்களுக்கு வளமான

எதிர்காலத்தை உறுதி செய்வதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடர்ந்து பாடுபட்டு வருவதாக கூறினார்.

இந்த ஒப்பந்தம் தேசிய நலனை உறுதிப்படுத்தும் வகையில் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகவும், முன்னேற்றத்தை நோக்கியதாகவும் அமைந்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

உலக பொருளாதாரத்தில் இந்தியாவின் நிலையை மேலும் வலுப்படுத்தும் வகையில் ஒப்பந்தம் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை மற்றும் ஜவுளி, ஆபரணங்கள், தோல் பொருட்கள் மற்றும் கடல்சார் உற்பத்திப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகள் இந்த ஒப்பந்தத்தால் பலனடையும் என்று திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. ராகுல் காந்தியும் மற்ற கட்சிகளின் தலைவர்களும் செயல்படுவது கண்டிக்கத்தக்கது என்றும் திரு. கோயல் கூறினார்.

<<<<>>>>

நாடு முழுவதும் உள்ள வன உயிரியல் பூங்காக்களின் மதிப்பீடு தொடர்பான இரண்டாவது சுற்று மேலாண்மை நடவடிக்கைகளை விரைவில் முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மத்திய வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று மத்திய வனவிலங்கு உயிரின ஆணையத்தின் 43வது கூட்டத்திற்கு அவர் தலைமை வகித்தார்.

பின்னர் அமைச்சர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், வன உயிரின பூங்காக்களைப் பாதுகாப்பது தொடர்பாகவும், அவற்றை நிர்வகிப்பது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆலோசனை நடத்தியதாக தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

விளையாட்டுத் துறைக்கான ஆறு பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா நேற்று காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

120 கோடி ரூபாய் முதலீட்டில் மேற்கொள்ளப்படும் இந்த திட்டத்தில், விளையாட்டு பயிற்சிக்கான பல்வேறு கட்டமைப்புகள் உருவாக்கப்படும் என்றும், கேலோ இந்தியா திட்டத்திற்கு இந்த

கட்டமைப்புகள் பெரிதும் பயன்படும் என்றும் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மணிப்பூர் மாநில பிஜேபி சட்டப்பேரவைக் கட்சித் தலைவராக திரு. **Yumnam Khemchand Singh** ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

புதுதில்லியில் உள்ள பிஜேபி தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் தேர்வு செய்யப்பட்டார்.

இது தொடர்பாக கட்சியின் பொதுச்செயலாளரும், மணிப்பூர் சட்டப்பேரவைக் கட்சித்தலைவர் தேர்வுக்கான பார்வையாளருமான திரு. தருண் சுக் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வழிகாட்டுதலில் திரு. **Yumnam Khemchand Singh** தனது அனுபவத்தால் அம்மாநில மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவார் என்று கூறியுள்ளார்.

<<<<>>>>

குஜராத் மாநிலத்தில் தண்ணீர் சேமிப்பு பணிகளை தீவிரமாக நடைமுறைப்படுத்தவும், வீடுகளுக்கு குடிநீர் வழங்கும் பணிகளுக்கு தொழில்நுட்ப உதவி வழங்கவும் மத்திய அரசு அனைத்து

நடவடிக்கைகளையும் எடுத்திருப்பதாக ஜல்சக்தி துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலத்தில் தமது துறையின் மூலம் நிறைவேற்றப்பட்டு வரும் பணிகள் குறித்து காணொலி மூலம் அம்மாநில முதலமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுடன் திரு. சி.ஆர். பாட்டீல் ஆலோசனை நடத்தினார்.

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டத்தின்கீழ் பணிகள், அனைத்து பகுதிகளிலும் நடைபெறுவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்ய வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

மழைநீர் சேமிப்பு, நிலத்தடி நீரை மேம்படுத்துதல் போன்ற பணிகளுக்க பெரு நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு நிதியை பயன்படுத்த தேவையான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்றும் திரு. சி.ஆர். பாட்டீல் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

நடப்பு நிதியாண்டின் கடைசி வேலை நாளான வரும் மார்ச் 31ஆம் தேதி அனைத்து வங்கிக் கிளைகளும் செயல்பட வேண்டும் என்று ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ளது.

அன்றைய தினம் மகாவீர் ஜெயந்தி என்பதால் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அரசு தொடர்பான பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்காக, மத்திய அரசின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

நடப்பாண்டின் கணக்குகள் தொடர்பான அனைத்து பரிவர்த்தனைகளையும் முடிக்க வேண்டியிருப்பதால் வங்கிகளின் அனைத்து கிளைகளும் செயல்பட வேண்டும் என்றும், இதுகுறித்து பொதுமக்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் வங்கிகள் தெரியப்படுத்த வேண்டும் என்றும் ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

நாட்டின் சரக்கு போக்குவரத்துக்கான கடல்வழித்தடம் மற்றும் துறைமுகத்தையொட்டிய பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றுக்கான இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நேற்று புதுதில்லியில் கையெழுத்தாயின.

மத்திய அமைச்சர்கள் திரு அஷ்வினி வைஷ்ணவ், திரு சர்பானந்த சோனாவால் ஆகியோர் முன்னிலையில் கையெழுத்தான இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், நாட்டின் கடல்சார் போக்குவரத்து

கட்டமைப்பை வலுப்படுத்தவும், இதில் சுயசார்பு நிலையை எட்டுவதற்கும் வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒப்பந்தங்கள் கையெழுத்திடும் நிகழ்ச்சியில் பேசிய ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், இந்த திட்டத்திற்கான சரக்கு பெட்டகங்களை உற்பத்தி செய்ய பட்ஜெட்டில் 10 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இதனையடுத்து, உள்நாட்டு சரக்கு போக்குவரத்து விரிவடையும் என்றும், வெளிநாட்டு நிறுவனங்களை சார்ந்துள்ள நிலை மாறும் என்றும் அவர் கூறினார்.

கப்பல் கட்டுமானத்திற்காக 65 ஆயிரம் கோடி ரூபாயை மத்திய அமைச்சரவை அனுமதித்துள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால், கப்பல் சரக்கு போக்குவரத்தில் சுயசார்பு இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு இந்த ஒப்பந்தங்கள் வழிவகுக்கும் என்று கூறினார்.

கப்பல் துறையில் தூய்மைப் பணியை சிறப்பாக மேற்கொண்டதற்கான **Swatch Bharat** விருதுகளையும் திரு சர்பானந்த சோனாவால் வழங்கினார்.

<<<<>>>>

மத்திய பட்ஜெட்டில் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்துறைக்கு **10** ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதன் மூலம் இந்தத் துறை மேலும் வளர்ச்சியடையும் என்று தொழில்துறையினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

**(Voice Byte - 41 Sec)**

<<<<>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தில்லி அணி **7** விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

வதோதராவில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் விளையாடிய குஜராத் அணி நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **7** விக்கெட் இழப்புக்கு **168** ரன் எடுத்தது.

**169** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தில்லி அணி, **15** புள்ளி **4** ஓவரில் இலக்கை எட்டியது.

---------------

**19** வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று ஆஃப்கனிஸ்தானை எதிர்கொள்கிறது.

ஹராரேயில் இந்தப் போட்டி இந்திய நேரப்படி பிற்பகல் ஒரு மணிக்கு தொடங்குகிறது.

இந்தப் போட்டியில் வெற்றி பெறும் அணி வரும் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள இறுதியாட்டத்தில் இங்கிலாந்து அணியுடன் மோதும்.

முன்னதாக நேற்று **Bulawayo-**வில் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணி **27** ரன் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

------------

ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டியில் இன்று **10** மீட்டர் பிஸ்டல் பிரிவு போட்டி நடைபெற உள்ளது.

புதுதில்லியில் இப்போட்டியின் ரைஃபிள் மற்றும் பிஸ்டல் பிரிவு போட்டிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

ஆடவர் பிரிவில் இந்தியாவின் சம்ரத் ராணா, வருண் தோமர், ஷ்ரவண் குமார் ஆகியோரும், மகளிர் பிரிவில் Suruchi Singh, Manu Bhaker, Esha Singh ஆகியோரும் பங்கேற்கின்றனர்.

**<<<<The End>>>>**